செ.வெ.எண்.04 நாள்.01.11.2017.

**திருநெல்வேலியில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற உள்ள பெல் மைதானத்தில் விழா அரங்கம் அமைக்கும் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

திருநெல்வேலியில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற உள்ள பெல் மைதானத்தில் விழா அரங்கம் அமைக்கும் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் நேரில் சென்று இன்று (01.11.2017) ஆய்வு செய்தார்.

பெல் மைதானத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா 12.11.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளது. இதற்கான, விழா அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் வந்திருந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி. பிரபாகரன், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ். இன்பதுரை மற்றும் பொதுப்பணித் துறை, மாநகராட்சி அலுவலர்களுடன் விழா மேடை அமைப்பது, பயனாளிகள், பொதுமக்கள், முக்கிய பிரமுகர்கள் இருக்கைகள் அமைப்பது, விழாவிற்கான முகப்பு தோற்றம் அமைத்தல், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு புகைப்படக் கண்காட்சி அமைத்தல், பல்வேறு துறைகளின் மூலம் கண்காட்சி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு விழா பணிகள் குறித்தும் கள ஆய்வு மேற்கொண்டனர். மேலும், விழா அரங்கு அமைப்பது தொடர்பாக செய்ய வேண்டிய பணிகள் குறித்து அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட நீதிமன்ற வளாகம் அருகிலுள்ள சங்கர்காலனி பகுதியில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா பலூனையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பறக்க விட்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுணா சிங்,இ.கா.ப., பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், மாநில கூட்டுறவு ஒன்றிய துணைத்தலைவர் திரு.கணேசராஜா, மாநில கூட்டுறவு விற்பனை இணையத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ஆறுமுகம், நெல்லை பேரங்காடி தலைவர் பல்லிக்கோட்டை திரு.செல்லத்துரை, முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா பரமசிவம், திரு.ஜெரால்டு, திரு.பரணி சங்கரலிங்கம், திரு.இ.நடராஜன், திரு.விஜயகுமார், திரு.பெரிய பெருமாள், திரு.கபேரியல் ராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.